**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.–2, உடுமலைப்பேட்டை**
**முன்னிலை:– திருமதி.R.H.உமா தேவி, பி.எஸ்சி., எல்.எல்.எம்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, உடுமலைப்பேட்டை.**
**2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 02 ஆம் நாள் வியாழன்கிழமை**
**Crl.M.P.No. 171/2026**
**Cr.No. 156/2026**
**CNR No. TNTI0F–000444–2026**

| | | |
|---|---|---|
| மனுதாரர்/எதிரி | – | A2. அய்யப்பன்,<br>த/பெ. மகுடீஸ்வரன்,<br>5/136, பொட்டிகாம்பாளையம்,<br>முண்டுவேலாம்பட்டி,<br>தாராபுரம். |
| //எதிர்// | | |
| எதிர்மனுதாரர்/<br>குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக உதவி ஆய்வாளர்,<br>குடிமங்கலம் காவல் நிலைய குற்ற<br>எண். 156/2026 |
| குற்றம் சாட்டப்பட்டது | – | சட்டப்பிரிவுகள் 74, 79 BNS and 4 of TNPHW Act – ன் படியான குற்றம் |
| எதிரி கைது<br>செய்யப்பட்ட நாள் | – | 10.06.2026 |
| பிணை மனுவின்<br>மீதான உத்தரவு | – | மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |

இம்மனு கடந்த 30.06.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பரிசீலணை செய்யப்பட்டு, இன்று 02.07.2026 ஆம் தேதி இம்மனு மீது இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.பிரபாகரன், B.A., B.L., மற்றும் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தாரர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும் ஆஜராகி

கூறிய வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக இன்றே இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>**உத்தரவு**</u>

1. இம்மனுவானது பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 480 – ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், எதிர்மனுதாரர் காவல் நிலையத்தாரால் சட்டப்பிரிவு 74, 79 BNS and 4 of TNPHW Act ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டு 10.06.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், எதிரி எவ்வித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும், எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் வயதான பெற்றோர்கள் மனுதாரரை சார்ந்து இருக்கிறார்கள் என்றும், மனுதாரரே அவரது குடும்பத்தில் வருமான ஈட்டும் ஒரே நபர் என்றும், மனுதாரரை பிணையில் விடுவிக்கும் பட்சத்தில் தலைமறைவாகமாட்டார் என்றும், தக்க பிணையதாரரை முன் நிறுத்த தயாராக உள்ளார் என்றும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை கடைபிடிப்பார் என்றும், எனவே எதிரியை பிணையில் விடுவிக்குமாறு தெரிவித்தார்.

3. எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணையில், இவ்வழக்கின் எதிரியை கடந்த 10.06.2026 ம் தேதி கைது செய்யப்பட்டு தற்போது உடுமலைப்பேட்டை கிளைச்சிறையில் இருந்து வருகிறார் என்றும், வழக்கானது கடந்த 25.06.2026 ம் தேதி CC.No.68/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் ஆஜராக வேண்டி வரும் 08.07.2026 ம் தேதி வாய்தா போடப்பட்டு இருந்து வருகிறது என்றும், வழக்கின் எதிரியை பிணையில் விடுவித்தால் வழக்கின் விசாரணையின் போது தலைமறைவாகக்கூடும் என்பதாலும், வழக்கின் வாதி மற்றும் சம்மந்தப்பட்டவர்களை மிரட்டக்கூடும் என்பதாலும், எதிரிகள் மீது ஏற்கனவே வேறு வழக்கில் பிணை நிபந்தனையின் பேரில் இருந்து வந்தும், குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளதால் எதிரிகளை பிணையில் விடுவித்தால் தொடர்ந்து இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும்

என்றும், எனவே மனுதாரர்/எதிரியை விடுவிக்க கடும் ஆட்சேபனை இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/எதிரி கடந்த 10.06.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதை கருத்தில் கொண்டும், எதிரி வேறு வழக்கில் பிணை பெற்று நீதிமன்ற நிபந்தனையை கடைபிடித்து வந்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் மற்றொரு எதிரிக்கு பிணை கிடைத்துள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரர் தரப்பில் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனையை கடைபிடிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளதை கருதில் கொண்டும், இவ்வழக்கின் எதிரியை பிணையில் விடுவிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் எனக்கருதி எதிரிக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிணையம் வழங்கி பிணையில் விட உத்தரவிடப்பட்டு இப்பிணை மனு அனுமதிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. மனுதாரர்/எதிரி தனக்காக இரு ஜாமீன்தாரர்களை முன்னிறுத்தி தலா ரூ.10,000/–த்திற்கு பிணையபத்திரம் சமர்ப்பிக்கவேண்டும். மேலும் மனுதாரர்/எதிரியின் அடையாள அட்டை நகல் சமர்பிக்க வேண்டும்.

2. மனுதாரர்/எதிரி பிணையில் சென்ற மறுதினத்திலிருந்து இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தினமும் காலை 10.00 மணிக்கு மறுஉத்தரவு வரும் வரை கையொப்பமிட வேண்டும்.

3.மனுதாரர்/எதிரி விசாரணை காலத்தில் தலைமறைவாகாமல் வழக்கு விசாரணைக்கு ஆஜராகவேண்டும்.

4. மனுதாரர்/எதிரி இவ்வழக்கின் சாட்சிகளை கலைக்கும் செயல்களில் ஈடுபடக் கூடாது என்றும், மீண்டும் இது போன்ற குற்ற வழக்குகளில் ஈடுபடக் கூடாது என்றும், உத்தரவிடப்படுகிறது.

5. மனுதாரர்/எதிரி முகவரிக்கான ஆவணங்களை தாக்கல் செய்யவும், மற்றும் முகவரி மாற்றம் செய்தால் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் நாள் உத்தரவிடப்பட்டது.

R H UMA DEVI Digitally signed by R H UMA DEVI
Date: 2026.07.02 19:28:52 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
உடுமலைப்பேட்டை.